“ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன!”

கோவையில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற ‘திராவிட மாடல் நாயகருக்குப் பாராட்டு விழா’ என்ற பெயரில் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள் தலைமையில் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனைகளைப் பாராட்டும் விதத்தில் சிறப்பாக நடந்துள்ளது.

பெரியார் ‘புத்தகம் வாசிப்பு மற்றும் நூலகங்கள்’ குறித்து மிகத் தெளிவான பகுத்தறிவுப் பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ‘‘நூலகங்களுக்குச் சென்று புத்தகங்களை வாசிக்கும் வாசகர்கள் எதையும் அப்படியே நம்பாமல், தங்களின் சுய சிந்தனை மற்றும் விமர்சனப் பார்வையோடு (Critical thinking) ஆராய்ந்து படிக்க வேண்டும் எனப் பெரியார் விரும்பினார். பெரியாரின் இந்தச் சிந்தனை களைப் போற்றும் வகையிலும், அவரது அறிவியல் மற்றும் பகுத்தறிவுப் பார்வை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், தற்காலத்தில் பெரியார் அறிவுலகம் போன்ற நவீன நூலகங்களும், பெரியாரின் பகுத்தறிவு மின்னணு நூலகங்களும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அவற்றில் தி.மு.க. தலைவர் தளபதி ஸ்டாலினுக்கு முழு பங்களிப்பும், காலச் செலவும் உண்டு என்பது தான் இந்தப் ‘பெரியார் அறிவுலகம்’ எனும் நூலகம்.

“அறிவியல் மற்றும் சமூக சீர்திருத்த நூல்களை வாசிப்பது முக்கியம். சீர்திருத்த நூல்கள் என்றால் அவற்றை வாங்கி வீட்டில் அடுக்கிப் பூட்டி வைத்துக் கொள்ளக் கூடாது; நாம் வாங்கிப் படித்ததும், அதனைப் பிறருக்குப் படிக்கும்படி கொடுத்து விட வேண்டும்; புத்தகங்கள் வீட்டில் முடங்கிக் கிடக் காமல் மக்களிடையே சுற்றிக்கொண்டே இருக்க வேண்டும்!” என்பது அவரது எண்ணம். கரண்டி பிடிக்கிற பெண்கள் கையில், புத்தகங்கள் கொடுத்தால் போதும்; அவர்களின் கல்வி, வாசிப்பும் சமூக விடுதலைக்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தைக் கூறும். ‘மனத் தடைகளை நீக்கும் அறிவுத் தொட்டி’ என்றார் பெரியார்.

“புத்தகங்களைச் சேமித்து வைக்கும் இடங்களோ கிடங்குகள் அல்ல; அவை மனித இனத்தை மேம்படுத்தவும், மக்களின் மனதில் இருக்கும் அறியாமையையும், மூடநம்பிக்கை போன்ற தடைகளையும் நீக்கவும் பயன்படும் அறிவுத் தொட்டிகளாக விளங்க வேண்டும்” என்று பெரியார் வாசிப்புச் சிறப்புகள் பற்றிக் கூறினார். அந்த வகையில் இன்று கோவையில் பெரியார் அறிவுலகம் மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கப்பட்டு இருக்கிறது. திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் அய்யா கி. வீரமணி அவர்கள் மிகவும் ஆழ்ந்த மன உருக்கத்தோடு மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் கொண்ட அயராத பெரு முயற்சி, பெருமை, அருமை, சாதனைகளைச் சுட்டிக் காட்டிப் பேசி உள்ளார்* .

“மனித இனம் தன்னுடைய சிந்தனைகளைத் தான் சேர்த்த அறிவுச் செல்வத்தைப் பிறருக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் கருவி தான் புத்தகங்கள்!. எனவே தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் வாசிப்பு மூலம் அறிவுத்தீ பரவட்டும்” என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறைகூவல் விடுத்திருக்கிறார்.

பெரியார் உருவாக்கிய திராவிட இயக்கத்தின் ஆணி வேராக அண்ணாவின் தம்பியாக கலைஞரின் வழித்தோன்றலாக கோவையில் ‘பெரியார் அறிவுலகம்’ கட்டி முடித்து மாணவர் மற்றும் கல்வியாளர்களுக்கு பயன்பட செய்திருக்கிறார்.

“இந்தியாவின் பதிப்பகத் தலைநகரமாகச் சென்னை உயர்ந்திருக்கிறது. முன்னணி அறிவுச் சமூகமாக நமது தமிழ்நாடு சமூகம் இருக்கக் காரணம், தமிழ் மக்கள் என்றும் வாசிப்பைக் கைவிடாமல் இருப்பது தான்!” என்று உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னைப் புத்தகக் காட்சி விழாவில் தனது சிறப்புரையில் பதிவு செய்திருக்கிறார்.

வீட்டிற்கோர் புத்தகச்சாலை வேண்டும் என்று அண்ணா அடிக்கடி பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் சுட்டிக் காட்டிப் பேசி வந்தார்கள். நம் வீட்டிலே சமையலறை, படுக்கை அறை, குளியலறை, கழிப்பறை என்பன இருப்பது போல, ஒவ்வொருவர் வீட்டிலும் படிக்கின்ற புத்தகங்கள் நிரம்பிய நூலகம் இருப்பது அவசியம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். “உலக அறிவை உருப்படியான காரியத்திற்குப் பயன்படும் வகையில், அறிவை தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்; பழைய முறைகளையும், மூட நம்பிக்கை எண்ணங்களையும், கேடு பயப்பன நூல்களைத் தவிர்க்கப்பட வேண்டும்; பூகோள சரித்திர ஏடுகள் நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தை வாழ்வுக்கான வழிகளைக் காட்ட வீட்டிற்கோர் திருக்குறள் நூல் கட்டாயமாக இருக்க வேண்டும்.

தமிழகத்தின் தனிச்சிறப்பு கூறும் சங்க இலக்கிய சாரத்தைத் தரும் நூல்கள் மக்கள், முன்னேற்றத்திற்கும், வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு தகவல் தெரிவிக்கும் நூல்கள், நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்கள் மாசு துடைத்தவர் கள், தொலைத் தேசங்களைத் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள், சாதனை படைத்த மனிதர்கள் ஆகியோரின் வாழ்க்கை குறிப்புகள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட வீட்டிற்கோர் புத்தகச் சாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கு ஒரு புத்தகசாலை தேவை; ஆனால், கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும்! வீட்டிலே அமைக்கும் புத்தக சாலையானது மாந்தர்க்கு வாழ்வில் விடுதலை ஏற்படுத்த வேண்டியதாக அமைய வேண்டும்!” என்று அண்ணா அவர்கள் நூலகத்தின் அருமை பெருமைகளை வரைந்துகாட்டிப் பேசி உள்ளார் .

இதனை எடுத்துக்காட்டும் விதத்தில் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் வாசிப்பும் மூலம் அறிவுத்தீ பரவட்டும் என்று மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கிக் காட்டிப் பேசியுள்ளார்.

கலைஞர் முதலமைச்சராகவும், தளபதி மு.க. ஸ்டாலின் துணை முதல்வராகவும் இருந்த போது, (2006–2011) தமிழகத்தில் 12,618 ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பேராலே நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டது. அதற்கான புதிய கட்டடங்கள் கட்டி ஒவ்வொரு நூலகத்திலும் ரூபாய் 50 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள், சிறுவர், இளைஞர்களுக்கான நூல்கள் இடம் பெற்றன. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் 2021 இல் அந்த நூலகக் கட்டிடங்கள் யாவும் புனரமைக்கப்பட்டு நிறைய நூல்கள் இடம் பெறத் தக்க வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இத்தாலி நாட்டில் லுனிசியானா மலைப் பகுதியில், ‘மவுண்ட் ரெஜியோ என்ற பசுமை நிறைந்த சிறிய மலைக் கிராமம் உள்ளது. இதுதான் புத்தகங்களின் அருமை பெருமைகளை உலகிற்கு முதன்முதலாக உணர்த்திக் கொண்டிருக்கிற ஊராகும்.. இந்த கிராமத்தில் இருந்து புறப்பட்ட சபாஷ்டீயானோ என்ற இளைஞன் 15 ஆம் நூற்றாண்டில் வட இத்தாலியில் ஒரு முக்கிய நகரில் மிலான் நகருக்குச் சென்று அச்சுக்கலையைக் கற்று, பின்பு இவர் தொடங்கிய புத்தக வியாபாரம் தான் இன்றைக்கு இத்தாலியைத் தாண்டி ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் புத்தகச் சந்தைகள் தொடங்கி இருக்கின்றன.

ஒருங்கிணைந்த இத்தாலியாக உருவாக்க சுதந்திரப் போராட்டம் நடத்திடக் காரணம். இந்தப் புத்தக வியாபாரிகள் கொண்டு சேர்த்த கருத்துப் பெட்டகங்கள் தான்! இன்றும் அங்குள்ள தெருக்களில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் புத்தகத் திருவிழா நடக்கிறது. உலகம் முழுவதும் வாசகர்களை இங்குக் கொண்டு வந்து சேர்க்கிறது. 1952 முதல் “பிரேமியோ பான்சுரெல்லா எனும் விருதானது இந்த ஊரின் இலக்கியப் பெருமைகளை உலகிற்கு எடுத்துச் சொல்லுகிறது. சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் இங்கு ஈர்த்துப் புத்தகம் வாங்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கி வருகிறது. இன்றைக்கு அதே போன்ற ஓர் அரிய, பெரிய சூழ்நிலையைத் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்படுத்திக் காட்டியுள்ளார்.

“ஒரு நூலகம் திறக்கப்படும் போது 100 சிறைச் சாலைகள் மூடப்படுகின்றன” (when a library opens Hundred prisons close) என்றார் புகழ்பெற்ற பிரஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியுகோ (Victor Hugo) என்ற ஓர் அறிஞன். இதன்மூலம் கல்வி அறிவு, பொருள் அறிவு பரப்புவதால் குற்றங்கள். குறைகின் றன. நூலகங்கள் மக்கள் அறிவைப் பெருக்கிடும் வழிகாட்டுதலாகவும், மேம்பாடு தரக்கூடியவையாகவும் அமைகின்றன. நூலகங்கள் அறிவுத் தேடலை நிறைவு செய்கின்றன. வாசிப்பும், வாசிப்பின் வழியே உருவாகிற எண்ணங்களையும் நம்மை சிறப்பான மேம்பாட்டிற்கு அழைத்துச் செல்கின்றன.

ஐரோப்பிய நாட்டின் மாவீரன் நெப்போலியன் தன் படைவீரர்களுக்கு மத்தியில் உரையாற்றும்போது, “எதிரிகளைப் பந்தாடுங்கள்! சொத்துக்களைச் சூறையாடுங்கள்! ஆனால் ஒருபோதும், எகிப்த்தில் உள்ள ‘அலெக்ஸாண்ட்ரியா’ என்ற நூலகத்தின் பெருமைகளைச் சிதைத்து விடாதீர்கள்!” என்று கட்டளையிட்டான். இதற்கு மாறாக, ஈழத்தில் தமிழர்களால் உயிர்க் கருவூல ஓவியமாக அமைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண நூலகத்தில் 97 ஆயிரம் நூல்கள் தீக்கு இரையாக்கப்பட்டன. ஒரு மொழியின் முக்கியத்துவம் அதன் இனத்தின் அடையாளமாக, இருக்கிறது. பண்பாட்டின் வளர்ச்சியாக, கலாச்சாரத்தின் தொட்டிலாகப் பாதுகாக்கிறது.



கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

“ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால், அதன் மொழியை அழித்துவிடு” என்று சோவியத் யூனியனில் மொழிக் கொள்கை பற்றி விவாதம் வந்தபோது, சோவியத் கல்வியாளரும் சமூகச் சேவகருமான ஆண்டன் மெக்கரன்கோ (Anton Makarenko) போன்ற அறிஞர்களால் சொல்லப்பட்டது . எனவே, நூலகங்கள் இன வழித் தோன்றலுக்கு வழிகோலி மனித வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருகின்றன .

உலகத் தலைவர்கள் எல்லாரும் புத்தகம் படிப்பதன் மூலம் நூல்களின் பெருமைகளையும், நூலகத்தின் சிறப்புகளையும் அறிவதோடு, ஒவ்வொருவரும் நூல் நிலையங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். புத்தகம் வாசிப்பதில் அதிக அக்கறை கொண்டவர் பேரறிஞர் அண்ணா. அவரின் பேனாவையும், செந்நாவையும் பேசாத உலக நாடுகளில்லை. பல்வேறு நூலகங்கள் சென்று வருவதுபோல், அவரது வருகையை அடிக்கடி சென்னை கன்னிமேரா நூலகமும் பதிவு செய்திருக்கிறது.

அண்ணாவைப் போல அவரின் தம்பி கலைஞரும் வெறும் வாசகர் மட்டுமல்ல; படைப்பாளர் கூட! அவர்கள் இருவரும் தீட்டிய எழுத்து ஓவியங்களைப் படித்துப் பல, பல மாணவர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் எம்.பில்; பி.ஹெச்.டி,வாங்கியகள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஆவார்கள் . அண்ணாவையும், கலைஞரையும் நூல்கள் இல்லாத துணையைப் பார்க்க முடியாது. வெளியூர் செல்லக் கார், இரயில் போன்ற பயணங்கள் மேற்கொள்ளும் போதும் அவர்களுடன் ஏறிச் செல்லுவது நூல்கள் தாம். போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைச்சாலைக்குள் சென்ற போதும், வெளியில் இருந்து நூல்கள் கொண்டு கொடுக்கப்படும். அதைப் போல் சிறைச்சாலையில் உள்ள நூலகங்களும் அவர்களது கை விரல்களும், மனச் சிறகுகளும் விரிக்காத ஏடுகள் ஏதும் இல்லை. அதனால், பலப் பலக் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், திரைக் கதைகள், கடிதங்கள், அரசியல் விமர்சனங்கள் எனப் பல்வேறு வடிவங்கள் பெற்று அவர்கள் இருவரால் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

அண்ணாவின் நாடக எழுத்தோவியத்தைக் கண்டு வியந்து விளித்த கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றோரால் இங்கர்சால், இப்சன், பெர்னாட்ஷா என்றெல்லாம் பாராட்டிப் பேசியது உண்டு.

சென்னை கிண்டி கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகம் எனக் கலைஞர் பெயர் வைத்தார். அதைப்போல, கோவையில் பெரியார் நூலகம் என்றும், மதுரையில் கலைஞர் நூலகம் என்றும், திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் என்றும் நெல்லையில் காயிதே மில்லத் நூலகம் என பல நூலகங்களை மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கி நூலகங்களின் பெருமையைப் பேச வைத்துள்ளார். அதனால் பல்லாயிரக்கணக்கில் மருத்துவம், பொறியியல், சட்டம், விஞ்ஞானம், பொருளியல், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் கலந்து கொள்பவர்களாக பயிற்சி பெற்று உருவாக்கப் பட்டு வருகிறார்கள்.

தி.மு.க. தலைவர் கலைஞர் அண்ணா அறிவாலயத்தில் ‘பேராசிரியர் அன்பழகனார் ஆய்வக நூல்நிலையம் ‘ என்று உருவாக்கி வைத்துள்ளதால், பல்வேறு பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் என உருவாகி வருகிறார்கள்.

சென்னை பெரியார் திடலில், பெரியார் 96 ஆவது பிறந்த நாளான 1974 செப்டம்பர் 17இல் முதல்வர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்ட ‘பெரியார் பகுத்தறிவு டிஜிட்டல் நூலகம் மற்றும் ஆய்வு மையம்’ இயங்கி வருகிறது. இங்கு ஏறத்தாழ 1,00,000த்திற்கும் மேற்பட்ட புத்தகங் கள், பெரியார் சொற்பொழிவுகள், எழுத்துகள், பகுத்தறிவு நூல்கள், சுமார் 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்று நூல்கள் பல இடம் பெற்றிருக்கின்றன.

கம்யூனிஸ்ட்டின் தந்தை காரல் மார்க்ஸ் ‘டாஸ் கேப்பிட்டல்’ (Das Kapital) எனும் மூலதன நூலை எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது பிரிட்டிஷ் அருங்காட்சியம் நூலகம் (British museum Reading Room) தான். காரல் மார்க்ஸைப் பற்றி அவரின் நண்பர் பிரடெரிக் ஏங்கல்ஸ் 1883 மார்ச் 14 இல் அறிக்கை வெளியிட்டு, மார்க்ஸின் அடக்கத்தின் போது அவர் ஆற்றிய உரையில், ”மனித குலத்தின் பெரிய சிந்தனையாளர் சிந்திப்பதை இன்று நிறுத்திக் கொண்டார் என்று சிறப்புடன் கூறியிருந்தார்

அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரும், நான் ஒரு இந்துவாகச் சாக மாட்டேன் என்று உறுதி மொழி எடுத்தவருமான புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கார், இளமைக் காலத்தில் அமெரிக்கா சென்று படித்துத் திரும்பிய நேரத்தில் 1917 ஜூலை20 இல் தான் வாங்கிப் படித்த சுமார் 20,000 மேற்பட்ட நூல்களும், மற்றும் ஆய்வுக் கட்டுரைகளும் இந்தியாவுக்குக் கப்பலில் அனுப்பி வைத்திருந்தார். ஆனால் நூல்களை ஏற்றி வந்த கப்பல் போர் விபத்தில் சிக்கி, கடலில் மூழ்கி போனது. வருத்தப்பட்டார் எனினும் அதன் பின்னர் தனது “இராஜ்கிரக” (Rajgriha) நூலகத்தில் 69,000 நூல்கள் சேர்த்து வைத்து ஒரு தனி நபரே படித்து வந்த பெருமை அவரைச் சாரும். அவர் மறைவுக்குப் பின்பு சித்தார்த்தா கல்லூரி, டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்கு அந்நூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்குப் படித்துச் சென்று கொண்டிருக்கிறார்கள் .

“என்னைப் பார்க்க வரும் நண்பர்கள், கழகத் தோழர்கள் யாவரும் ‘பூங்கொத்து வேண்டாம்; பொன்னாடை வேண்டாம்; மாலை, வேட்டி, துண்டு, சால்வைகள் எனப் போட வேண்டாம்; புத்தகம் கொடுத்தால் போதும்!” என்று முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறினார். இன்று பல இலட்சம் நூல்கள் தன்னைக் காண வரும் தோழர்களால் வழங்கப்பட்டு, அவை அனைத்தும் தமிழ்நாடு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள கல்லூரிகளில் உள்ள நூல் நிலையங்கள், பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டு, வாசிக்கப்பட்டு வருகின்றன . உலக வரலாற்றில் இதுபோல எந்த ஒரு தலைவரும், எந்த ஓர் இயக்கமும் இதுவரை செய்யாத நிலையில் தளபதி மு.க ஸ்டாலின் செய்து வரும் அறிவுப் பணியானது மாபெரும் சாதனையாகும்.

ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் ‘திருக்குறளைப் படியுங்கள்; நூலகங்கள் செல்லுங்கள்’ என்று காந்திக்கு அவ்வப்போது கடிதத் தொடர்பில் பதில் எழுதிக் கொண்டிருந்தார் .’என்னைச் சந்திக்க வருபவர்கள், ஏதாவது நான் படிக்காத நல்ல நூல்கள் கொடுத்தால், அதை நான் பெருமையாக கருதுவேன்’ என்று சொன்னவர் தான் மகாத்மா காந்தி!

அதைப்போல ஆங்கிலேய அரசை எதிர்த்து இந்திய பாராளுமன்றக் படிக்கட்டில் வெடி குண்டு வீசிய விடுதலை வீரன் பகத்சிங் சிறைக் கொட்டடிக்குள் அடைக்கப் பெற்று விசாரணையின் போது தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவனுக்கான தூக்கு போடும் நேரம் நெருங்கியது. அதனை நினைவுப்படுத்த வந்த சிறை அதிகாரி ”உங்களுக்கான நேரம் வந்துவிட்டது; நீங்கள் தயாராகுங்கள் என்று சொன்னான். ஆனால், பகத்சிங்கோ நான் முக்கியமான நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறேன். அதில் சில பக்கங்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றைப் படித்து விட்டு வருகிறேன்; எனக்கு அதற்கான நேரம் ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டான் பகத்சிங். தான் சற்று நேரத்தில் தூக்குக் கயிற்றை முத்தமிட்டுத் தொங்கப் போகிறோம் எனத் தெரிந்தும் படிக்கிற தாகத்தை விட்டானில்லை அந்த மாவீரன் பகத்சிங்!

லெனின் எழுதிய ”அரசும், புரட்சியும் (State and Revolution) அல்லது ‘லெனின் நினைவுகள் ‘(Remi niscences of Lenin) எனும் நூலைத்தான் பகத்சிங் படித்துக் கொண்டிருந்தான்.

முதன் முதலில் 1578 ல் இந்தியாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட (Doctorina Christm) எனும் நூல் தமிழில் வெளிவந்ததாகும் இப்போது இந்த புத்தகம் இந்தியாவில் இல்லை. இது அமெரிக்க ஹார்வாட் பல்கலைக் கழக கல்லூரியில் மட்டுமே உள்ளது.

நமது தாய் மொழியான தமிழ் மொழிதான் உலகில் தோன்றிய மூத்த மொழி! முதல் மொழி! இந்த மொழியில் இடம் பெற்ற நூல்களில் அரிய கருத்துக்கள், இலக்கியங்கள், பண்பாடு, கலாச்சாரத்தைக் கூறும் வரலாற்று நூல்கள் இவை அனைத்தும் ஆவணங்களாக உலகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். இதற்கான ஆளுமையைததான் நம் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

காந்தி அடிகள், திலகர், நேரு, இராஜாஜி, வ.உ.சி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதலானோர் சிறையில் இருந்தவாறு பல்வேறு புத்தகங்களை எழுதிப் பெருமைப்படுத்தியுள்ளனர். அவர்கள் உலகுக்கு நூல்கள் மூலம் கருத்துகளாக விருந்தளித்துள்ளனர் .

புகழ்பெற்ற ஃபிரான்சு கவிஞரும், பத்திரிக்கையாளரும், நாவலரிசிரியருமானவர் அறிஞர் அனல் டோல் பிரான்ஸ். 1921 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர். இவர் சிறந்த நூலகர் என்பதால் பல்வேறு நூல்கள், புத்தகங்களைப் பற்றி விமர்சனம் செய்தவர். இவரது படைப்புகள் சில தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. ‘தாசியும், தபசியும்’ என்ற நாவல் பிரபலமானது. ”புத்தகங்களை இரவலாக யாருக்கும் கொடுக் காதீர்கள்; யாரும் திருப்பித் தருவதில்லை. என்னிடம் உள்ள புத்தகங்கள் யாவும் பிறரிடம் இருந்து இரவல் பெற்றவை என அவர் கூறியுள்ளார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து: மின்சார கொள்முதல் முறைகேடு, மின்வெட்டு ஆகியவற்றை, எதிர்க்கட்சியினர் புகார் எனக் கடந்து போகாமல், விஜய் நேரடியாகத் தலையிட வேணும்ன்னு திருமாவளவன் பேசி இருக்காரே!

சிந்துமணி : ஆமாண்டி அந்து; அப்படித்தான் சொல்லி இருக்காரு. அதுசரி. முதலமைச்சர் என்ன பண்ணுவாரு. இப்ப கவர்ன்மெண்ட்டை நடத்துறதே கார்ப்பரேட் பவர் சென்டர்கள் தான்னு எல்லாருக்குமே தெரியுமே. ஏதோ சொல்லணும்ன்னு திருமாவளவன் சொல்லி இருக்காரு! அவ்வளவுதான்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஓழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(5.11.2026)



1. திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே நாகையா கவுண்டன்பட்டியில் பணம் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட தகராறில் தி.மு.க. கிளை செயலாளர் வெட்டிப் படுகொலை ...

2. கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே சிறைக்குச் சென்று ஜாமினில் வந்த கூலித் தொழிலாளி முன் விரோதம் காரணமாக மர்ம கும்பலால் சரமாரியாக வெட்டிப் படுகொலை ....

3. திருநெல்வேலி டவுன் பகுதியில் இரு கோஸ்டிக்கு இடையே ஏற்பட்ட தகராறில் கல்லால் தாக்கி வாலிபர் படுகொலை ...

4. தர்மபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி அருகே முன்விரோதம் காரணமாக சமையல் மாஸ்டர் கத்தியால் குத்திக் கொலை ....



5. திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் அருகேநிம்மியம்பட்டுகிராமத்தில்குடிபோதையில் ஏற்பட்ட தகராறு காரணமாக வாலிபர் கற்களால் தாக்கி படுகொலை ...

6. சென்னையை அடுத்த நீலாங்கரையில் முதல்வர் வீட்டு அருகே சாலையோரம் வீசப்பட்ட பிறந்தபச்சிளம் பெண் குழந்தை ....

7. சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே பத்திர கவுண்டம்பாளையம் பகுதியில் கூட்டுறவுத்துறை துணை பதிவாளர் வீட்டு பூட்டை உடைத்து 40 பவுன் நகை கொள்ளை ....

8. சென்னை ஓட்டேரி அருகே வேலைக்குச் சென்று திரும்பிய வெல்டிங் தொழிலாளியை வழிமறித்து பணம் மற்றும் செல்போன் பறிப்பு ....



9. தாம்பரம் அருகே பெண் குரலில் செல்போனில் பேசி நேரில் வரவழைத்து பணம் பறிக்க முயன்ற போது தப்பி ஓட முயன்ற வாலிபரை அறிவாளால் வெட்டிய நான்கு பேர் கொண்ட கும்பல்...

10. சென்னை கொடுங்கையூர் அருகே டாஸ்மாக் கடையை மூடும்போது ஏற்பட்ட தகராறை தடுக்க வந்த சப் இன்ஸ்பெக்டருக்கு கன்னத்தில் அறை கொடுத்த போதை ஆசாமி ....

11. சென்னை ஓட்டேரி அருகே சேமார்த்த அம்மன் கோவில் தெருவில் கள்ளத்தனமாக மது விற்பதை விசாரிக்கச் சென்ற சப்இன்ஸ்பெக்டருக்கு அடி உதை...



12. தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் கோவில் திருவிழா பாதுகாப்புக்கு வந்திருந்த பெண் போலீசுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த இன்ஸ்பெக்டர் இடமாற்றம் ...

13. சென்னை துரைப்பாக்கம் அருகே கந்தன் சாவடியில் இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த இறைச்சி கடை உரிமையாளர் சிக்கினார் ....

14. சென்னை கொளத்தூரில் டாஸ்மாக் கடையை முன்கூட்டியே பூட்டியதால் ஆத்திரம், சூப்பர்வைசர் மற்றும் ஊழியர்களை தக்கிய குடிமகன் ...

15. ஆவடி அடுத்த கண்ணியம்மன் நகரிலிருந்து சென்ற மாநகரப் பேருந்தில் படிக்கட்டில் நின்ற மாணவர்களை தட்டிக் கேட்ட கண்டக்டருக்கு அடி உதை, மாநகரப் பேருந்துகளை ஆங்காங்கே நிறுத்தி டிரைவர் - கண்டக்டர்கள் போராட்டம்....

16. திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணன் பகுதியில் விவசாயி வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு ....

17. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தனியார் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே மோதல், அலறியடித்து ஓடிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்....

18. காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே வல்லம் வடகால் பகுதியில் பணி நிரந்தரம், தீபாவளி போனஸ் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தனியார் நிறுவன ஊழியர்கள் சாலை மறியல் ....

பெரியார் அறிவுலகத்தை வடித்த வரலாற்று நாயகர் நமது 'திராவிட நாயகர் 'மு.க.ஸ்டாலின்!

இது வெறும் பாராட்டு விழா அல்ல; உங்கள் சாதனைகளுக்கு நன்றி பாராட்டும் அரிய விழா!

கோவை: பாராட்டு விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி சிறப்புரை!

கோவை, நவ.6- கோவையில் ரூ.300 கோடி செலவில், காலத்தால் அழிக்க முடியாத, என்றும் நிலைத்து நிற்கக் கூடிய பெரியார் அறிவுலகத்தை ஏழுடுக்கு மாளிகையாக உருவாக்கிய தளபதி மு.கஸ்டா லின் அவர்களுக்கு நன்றி பாராட்டு தெரிவித்து, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:

இந்தக் கோவை மாநகரத்தில், இப்படி ஒரு வரலாற்றுச் சாதனை - காலத்தை வெல்லக்கூடிய ஒரு வரலாற்றுச் சாதனையாக இருக்கக்கூடிய 'பெரியார் அறிவுலகம்' என்பதை 300 கோடி ரூபாய் திட்டத்திலே சிறப்பாக அமைத்து, காலமெல்லாம் மாறும்.

இதய சிம்மாசனத்தில் உள்ளவர்!

ஆனால், அறிவுலகம் என்றைக்கும் நிலைத்திருக்கும் என்று சொல்லக்கூடிய மகத்தான ஒரு சாதனையினுடைய நாயகர் எங்கள் சகோதரர், அவரை மேனாள் முதலமைச்சர் என்று அழைக்க நான் விரும்பவில்லை; மாறாக பதவி சிம்மாசனத்திலே இருந்தாலும், இல்லை என்றாலும் உலக மக்களுடைய இதய சிம்மாசனத்தை என்றைக்கும் நிரந்தரமாகக் கொண்டிருக்கக் கூடியவர் எங்கள் சகோதரர் திராவிட நாயகர்.

அவருடைய சாதனையை, அவரேதான் முறியடிக்க முடியும், மீண்டும் வந்து. வேறு எவரும் முறியடிக்க முடியாது. அப்படிப்பட்ட தயாரிப்பு. பெரியார், அறிவாசான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் - எல்லாவற்றையும் கலந்த கலவையினுடைய பெயர் தான் மு.க.ஸ்டாலின் என்பதாகும். அப்படிப்பட்ட ஓர் அரிய சகோதரர் - சாதனைகள் மேல் சாதனைகள். இந்தத் தெருக்களின் வழியே வந்தேன்; நான் தங்கிய விடுதியில் இருந்து வெளியே வருகிறேன். இந்தப் பக்கம் பார்த்தால், 'பெரியார் அறிவுலகம்' அந்தப் பக்கம் பார்த்தால், செம்மொழி பூங்கா. தமிழ்நாட்டை பூங்காவாக்கினீர்கள்; சிலர் இப்போது, புயலாக ஆக்க முயற்சிக்கிறார்கள். அதற்கு ஒருபோதும் மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள். அத்தகைய பெருமைக்குரிய திராவிட நாயகர் அவர்களே, உங்களை நாங்கள் தலை தாழ்ந்து வரவேற்கிறோம்!

அருமையான தருணம்!

தாய்க்கழகம், உச்சி மோந்து கட்டி அணைக்கிறது. தாயின் மடியில், நீங்கள் இன்றைக்கு இருக்கிறீர்கள். இந்த மடி நிரந்தரமானது; இது வரும், போகும் என்று சொல்வது அல்ல. இது 'மாண்பு மிகு' அல்ல; 'மானமிகு' என்பதுதான் மிக முக்கியமான ஒன்றாகும். அப்படிப்பட்ட ஓர் அருமையான ஒரு தருணம் இது.

ஜப்பான் மொழியிலே ஒரு சொல் உண்டு - அதாவது, 'இச்சியாகோ' என்று சொல்வார்கள். 'இச்சியாகோ' என்று சொன்னால், 'இதுபோல தருணம் எப்போதும் வாய்க்காது' என்று சொல்லக்கூடிய ஓர் அருமையான தருணம். அந்தத் தருணத்தை இப்போது நாங்கள் பெற்றிருக்கிறோம். கோவையிலே ரூ.300 கோடி மதிப்பில் நூலகம்; அதை அமைப்பதற்கு அவருக்குத் துணையாக இருந்த கே.என்.நேரு அவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

அதுபோலவே இந்தச் சிறப்பு விழாவிற்கு, நாங்கள் எல்லாம் முயற்சி செய்த நேரத்தில், "இதோ நாங்கள் இருக்கிறோம்" என்று சொன்ன செந்தில் பாலாஜி அவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், இவர் மிசாவில் சிறைக்குப் போகவில்லை என்று சொன்ன பொய்யர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குக் கண்ணைதிரே இருக்கக்கூடிய எங்கள் காரோட்டி கண்ணப்பர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இந்த விழாவிற்கு நான் வரும்போது, மருத்துவமனையிலிருந்து வந்திருக்கிறேன். ஆனால், மருத்துவம் எங்கே கிடைக்கும் என்பதற்காக வந்தேன் தெரியுமா? இந்த மருத்துவத்துக்காகத்தான் - இந்த மருத்துவத்துக்காகத்தான்! இதை பார்த்த உடனே இவ்வளவு பெரிய மகிழ்ச்சியைப் பெறுவதற்காகத் தான் வந்திருக்கிறேன்.

இதய நாயகன்!

அப்படிப்பட்ட எங்கள் இதய நாயகராக இருக்கக்கூடிய, நம்முடைய தளபதி அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரையாற்றிய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீ.அன்புராஜ் அவர்களே, ஆதாரங்களோடு சாதனைகளைப் பட்டியலிட்ட நம்முடைய கழகத்தின் துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களே, அதுபோல முன்னிலை ஏற்றிருக்கக்கூடிய பெருமக்களான செந்தில் பாலாஜி அவர்களே, மேனாள் அமைச்சர்களாக இருக்கக்கூடிய கோவை மண்டல பொறுப்பாளர் மானமிகு எ.வ.வேலு அவர்களே, மானமிகு கண்ணப்பன் அவர்களே, மானமிகு சாமிநாதன் அவர்களே, மானமிகு முத்துச்சாமி அவர்களே, மானமிகு கயல்வழி செல்வராஜ் அவர்களே, கோவை மாவட்ட மாநகர திமுக செயலாளர் மாநகர செந்தமிழ்ச்செல்வன் அவர்களே, தெற்கு தளபதி முருகேசன் அவர்களே, வடக்கு தொண்டாமுத்தூர் ரவி அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் கோவை கணபதி ராஜ்குமார் அவர்களே, பொள்ளாச்சித் தோழர் ஈசுவரசாமி அவர்களே, ஈரோடு பிரகாஷ் அவர்களே, கோவை மாநகர மேயர் வணக்கத்திற்குரிய மேயர் ரங்கநாயகி அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் அவர்களே, மற்றும் இந்த இயக்கத்திலே சிறப்பான வகையிலே ஏற்பாடு செய்திருக்கின்ற எங்கள் பெருமைமிகு செயல்வீரர் கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைரும், இந்நிகழ்விற்கு நன்றியுரை கூற இருக்கக்கூடிய சந்திரசேகர் அவர்களே,

முன்னிலை வைக்கக்கூடிய தோழர்களே, நேரத்தின் நெருக்கடியினால் அவர்களுடைய பெயர்களை விளிக்கவில்லை. அதைத் தோழர்கள் அதை பொருட்படுத்த மாட்டார்கள். அப்படிப்பட்ட தோழர்களே, வெள்ளம் போல் திரண்டிருக்கக்கூடிய எனது அருமை கொள்கை உறவுகளே! தாய்மார்களே பெரியோர்களே உங்கள் அனைவருக்கும் நன்றி!

நெஞ்சமெல்லாம் பூரித்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பூரிப்பு - இப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சி - இப்படிப்பட்ட ஒரு காட்சி - என்றைக்கும் எங்களைச் சிறப்புப்படுத்தும்; இளமையாக்கும்; வளமையாக்குவது என்பது முக்கியமல்ல; இளமையாக்கும், அதுதான் மிக முக்கியம். அப்படிப்பட்ட ஓர் அற்புதமான ஒரு நிலை.

இந்த விழா இரண்டு நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. ஒன்று, தந்தை பெரியாருடைய 148 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா. இன்னொன்று, 300 கோடி ரூபாய் மதிப்பில், இதுவரை நாடு காணாத, ஏன் ஒரு வகையிலே, உலகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களுடைய நூலகங்களை நான் பார்த்திருக்கிறேன்; பீக்கிங் பல்கலைக்கழகத்துக்கு, நான் பெரியார் மணியம்மைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையிலே அழைக்கப்பட்ட நேரத்தில், அங்கே உள்ள ஒரு நூலகத்தைத்தான் முதலில் பார்த்தேன். அந்த நூலகத்திலே, நூலகராக இருந்தவர்தான் மாசேதுங் அவர்கள்.

வெறும் நூலகம் அல்ல!

அந்தப் பல்கலைக்கழகத்தையும் பார்த்தோம்; இங்கிலாந்து ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம்.



அதுபோல கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் - பல நூல்களைப் பார்த்திருக்கி றோம். பல நூலகங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இன்று காலை, இந்த மகத்தான மாமனிதர் செய்திருக்கிற அந்தச் சாதனையினுடைய வடிவம் இருக்கிறதே, அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அது வெறும் நூலகம் அல்ல; அருமையாகப் பெயர் வைத்திருக்கிறீர்கள் சகோதரர்களே! 'பெரியார் அறிவுலகம்' - அறிவுலகத்தை, எந்த அழிவுலகமும் அழித்துவிட முடியாது. அப்படிப்பட்ட அந்த அறிவுலகத்தைக் காண்பதற்காக வந்தபோது, நான் கொஞ்சம் சற்று சோர்வோடு வந்தேன்.

உண்மையைச் சொல்லுகிறேன்; உண்மையைத் தவிர எங்களுக்கு வேறு பழக்கம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட நேரத்திலே, என்னை அவர் கவனத்தோடு என் கையைப் பிடித்தவர் கடைசி வரை விடவில்லை. சிலர் நினைக்கலாம், இப்போதுதான் அந்தக் கை பிடித்தது என்று. அல்ல, 50 ஆண்டுகளுக்கு முன்னால், மிசா சிறையில், அவர் அடித்துத் தள்ளப்பட்ட நேரத்திலே, என் மீது தான் விழுந்தார். அந்தக் கையை இரத்தக் கறையோடு பிடித்த கை இருக்கிறதே, இந்தக் கரங்கள் என்றைக்கும் பிடித்திருக்கும்; எந்த நிலைகளிலும் மாறாது. என்றைக்கும் எங்களுக்கு தற்காலிகம் கிடையாது. நிரந்தரம்தான். கொள்கையா? நிரந்தரம். நட்பா? நிரந்தரம். ஆனால், சமரசம் கிடையாது. நட்பில் சமரசம் இருக்கலாம் என்ற உணர்வோடு, தந்தை பெரியாருடைய கொள்கைக்கு, இங்கே பட்டியல் போட்டு காட்டிவிட்டார் துணைத் தலைவர் அவர்கள். அன்றைக்கும் நெருக்கடி; இப்போது வேறு வகையான நெருக்கடி. அவர் விமான நிலையத்திற்குப் போக வேண்டும். ஆகவே, எனக்குப் பேச நெருக்கடி, நேர நெருக்கடி. எனவேதான், சிறப்பாக ஒரு கருத்தை உங்களுக்குச் சொல்ல விரும்பு கிறேன்.

நண்பர்களே, அதை நன்றாக நினைத்துப் பாருங்கள். எப்படிப்பட்டவர் அவர் - அழகுக்காக அலங்காரத்துக்காக திராவிடர் கழகத்துக்காரன் பேச மாட்டான். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள், 18 ஆண்டு காலம் பிரிந்த நிலையிலே, திருச்சியிலே அய்யாவும், அண்ணாவும் ஊர்வலமாக வருகிறார்கள். நான் தான் ஓடிப்போய், பெரியாரிடம் தயக்கத்தோடு கேட்டேன். "அய்யா, அண்ணா வருகிறார் நாளைக்கு; நீங்கள் ஒன்றாக ஊர்வலத்திற்கு வர வேண்டும் என்று நினைக்கிறோம்" என்று. அண்ணாவிடம் கேட்டுவிட்டீர்களா? என்றார் அய்யா.

அண்ணா, நாளைக்குத் தான் வருகிறார் என்றேன்.

எதைப்பற்றியும் கவலைப்படாதவர்!

அண்ணா, எப்போதுமே ஊர்வலத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டார். மறுநாள் காலையில், அண்ணா அவர்களை வரவேற்றுவிட்டு, அண்ணாவை அரசினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றேன்.

அய்யா எப்படி இருக்கிறார்? என்று அண்ணா கேட்டார்.

நன்றாக இருக்கிறார், உற்சாகமாக இருக்கிறார் என்று சொல்லிவிட்டு, அண்ணா ஓர் அன்பான வேண்டுகோள்; தோழர்களின் வேண்டுகோள் என்றேன்.

என்ன? என்றார் அண்ணா.

நீங்கள் இரண்டு பேரும் ஊர்வலத்தில் ஒன்றாக வரவேண்டும் என்றேன்.

அப்படி நான் சொன்ன உடனே, ஏதாவது காரணம் சொல்லி மறுப்பாரோ என்று நான் நின்றிருந்தேன். அய்ந்த நிமிடம் என்று கையைக் காட்டினார்.

எதைப்பற்றியும் கவலைப்படாதவர், அய்ந்து நிமிடம் என்று எதற்காகச் சொன்னார் என்றால், 'ஷேவ்' செய்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று சொன்னார்.

அன்றைக்கு அவர்கள் பார்த்த காட்சி இருக்கிறதே, அது சாதாரணம் அல்ல. அது மாதிரி, அந்த அண்ணா அன்றைக்குப் பேசிய ஒரே கருத்து, பெரியார் விழா என்பதற்காகச் சொல்லுகிறேன். பெரியார் சமத்துவபுரம் - இந்தியாவிலே எங்கும் கிடையாது, ஜாதி ஒழிப்புக்காக. அதேபோல, வைக்கம் நூற்றாண்டு - அவர் ஏற்படுத்திய வரலாறு இருக்கிறதே, மிகப் பெரிய ஒரு வரலாறு. உலக மக்கள் எல்லாம் புத்தகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்களாலே அண்ணா சொன்ன ஒரே ஒரு கருத்தைச் சொல்லுகிறேன். பெரியாருடைய அறிவு புரட்சி - அவர்கள் எப்படி அறிவு உலகம் என்று பெயர் வைத்தார்கள் - எவ்வளவு நுண்ணறிவோடு அவர்கள் செய்திருக்கிறார்கள் -கூர்த்த மதியோடு செய்திருக்கிறார் என்பதற்கு அடையாளம்.

அண்ணா பேசுகிறார் கேளுங்கள்:

அறிவுப் புரட்சி!

"பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி, காலத்தால், சுலபத்தில் நிற்கப் போவதில்லை. அது போக வேண்டிய தூரத்துக்குப் போய், அடைய வேண்டிய சக்தியை, இலக்கை தொட்டுத்தான் நிற்கும். அப்படி, வில்லை விட்டுக் கிளம்பிய கணை, அடைய வேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான், அதன் வேகம் நிற்குமோ, அதைப்போல பெரியார் அவர்களிடத்தில் இருந்து பிறந்த அறிவுக்கணை எந்த லட்சியத்தை அடைய வேண்டுமோ, அதை அடைந்தே தீரும். அதில் யாருக்கும் அய்யமில்லை. அதில் கால வட்டவடையைக் கூட நாம் கருதத் தேவையில்லை" என்று சொன்னார்கள்.

அந்த அறிவுக்கணைதான், இங்கே பெரியார் அறிவுலகத்தை உருவாக்கி இருக்கிறது. ஆயிரம் கோடி நன்றிகள்! நன்றி என்ற வார்த்தை எங்களுக்குப் போதாது. அப்படிப்பட்ட சாதனையை நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். சில பேர் நினைக்கிறார்கள் - உங்களைப் பதவியால் அளக்க முடியாது; உழைப்பால் அளக்க முடியுமா? என்றால், அப்படியும் அளக்க முடியாது. அத்தகைய உழைப்பு. அப்படிப்பட்ட உங்களுடைய ஆட்சி என்றைக்கும் ஆட்சியாகத்தான் இருக்கும். ஒருபோதும் காட்சியாக இருந்ததில்லை. இனத்தின் மீட்சியாக இருக்கக்கூடிய ஓர் ஆட்சியாகத்தான் நீங்கள் நடத்தி இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட ஆட்சியில், சாதனைகளுக்கு மேல் சாதனை. ஆனால், இன்றைக்கோ வேதனைகளுக்கு மேல் வேதனை என்று போய்க்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே, நிச்சயமாக அறிவுலகம்தான் - அதை இனிமேல் கணகண்காணிக்க வேண்டும்.

அவர்தான் பெரியார்!

நாடு, சமுதாயம் எப்படி போய்க்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய நேரத்திலே, இதைத்தான் நினைக்க வேண்டும்.

'பெரியார் அறிவுலகம்' என்று அவர்கள் பெயர் வைத்தது, எவ்வளவு சிறப்பானது என்பதற்கு அடையாளம் சொன்னால், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், மிலேனியன் என்று சொல்லக்கூடிய ஆயிரமாவது ஆண்டு வருகிற நேரத்திலே, அற்புதமான ஒரு கவிதையைக் 'குடிஅரசில்' எழுதினார்கள்.

"ஆயிரம் ஆண்டெனும் மூதாட்டியவள்
அவர் அறிந்திராத அறிவாவார்
அணிந்திராத அணியாவார்! அவர்தான் பெரியார்!" என்று சொன்னார்.

அப்படிப்பட்ட பெரியாரை அறிந்து, அதே அறிவுலகத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள். எப்படி உங்களைப் பாராட்டுவது என்று தெரியவில்லை.

பெரியாரின் சேவை எப்போதும் தேவை!

இன்றைய சூழ்நிலையிலே, எங்கு பார்த்தாலும் ஜாதிக்கவரங்கள்; எங்கு பார்த்தாலும் மதவெறியர்கள்; எங்கு பார்த்தாலும் மூட நம்பிக்கைகள் புயல்விரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன. இந்தக் காலகட்டத்திலே, பெரியாரின் தேவை, எப்போதும் சேவை! அதை உணர்ந்துதான், அறிவை விரிவு செய்; அகண்டமாக்கு - விசாலப் பார்வையால் விழுங்கு உலகத்தை என்று ஆக்கி கொண்டிருக்கக்கூடிய அந்த வாய்ப்பை நீங்கள் தந்திருக்கிறீர்கள். எனவே, இது வரலாறு. சில தலைவர்கள், வரலாற்றில் இடம்பெறுவார்கள்; ஆனால், நீங்கள் வரலாற்றை உருவாக்குகிற, வரலாற்றுக்கே உரிய வரலாற்று நாயகர். அப்படிப்பட்ட உங்களுக்குத் தாய்க் கழகம் பூரிப்போடு அணைத்து மகிழ்கிறது.

தாய்க் கழகத்தினுடைய மகிழ்ச்சி எல்லையற்ற மகிழ்ச்சி! தாய் எந்த நிலையிலும் ஒன்றாக இருப்பார்கள். எந்த நிலையிலும் தாய் என்ன செய்தாலும், பிள்ளைகள் இருப்பார்கள். எனவேதான், நமக்கு இருப்பது கூட்டணி உறவுல்ல; இது கொள்கை உறவு. அதுதான் மிக முக்கியம். என வேதான், எப்போதும் இருக்கக்கூடியவர்கள், எப்போதும் ஒன்றாக இருக்கிறார்கள். இங்கே கவிஞர் அவர்கள் சிறப்பாகச் சொன்னார். அவர் செய்ததினுடைய அடையாளம்தான். கவிஞர் எல்லாம் பாடினார் - புரட்சிக் கவிஞர் பாடினார் - அவர் பாடினார் என்பது அல்ல; அண்ணா பேசினார் என்பதல்ல; அதைச் செய்கின்ற களத்திலே இருக்கக்கூடியவர்கள் வந்திருக்கிறார்கள். இது ஏதோ ஆட்சி வேடிக்கைக்காக என்பதற்கு அல்ல; கேளிக்கைக்காக என்பதற்கு அல்ல. அதிகார ஆணவம் இருக்கிறது என்பதற்காக நீங்கள் ஒருபோதும் ஆட்சி அமைத்துக் கொண்டதில்லை. ஆகவேதான், நெஞ்சத்தில் நீங்கள் நிலைத்திருக்கிறீர்கள். அது வாக்குப் பெட்டிகளுக்குள்ளே, இருதயத்துக்குள்ளே இருக்கிறது என்பதைச் சிறப்பாக நினைத்துக் கொள்ள வேண்டும்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்,

"சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகினை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப் போம்; பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய் வோம்"

என்று எவ்வளவு அழகாகச் சொன்னார்.

ஆகவே, பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்கு 'பேசு சுயமரியாதை உலகு' என்று சொன்னார். சுயமரியாதை உலகு என்றாலும், அறிவுலகு என்றாலும் சிறப்பானது.

சமூகமே கேள்!

இதேகான் சமூகமே! முன்னேறு, முன்னேறு, முன்னேறு! என்று சொல்லி, அவர்களை முன்னேற்றினார்கள். அதைத்தான் இந்த அறிவுலகத்தின் மூலம், ஆயிரம் ஆயிரம் சாதனைகளைக் குவிப்பதன் மூலமாக செய்து வந்திருக்கிறீர்கள்.

எனவேதான், உங்களை எப்படிப் பாராட்டுவது? எப்படி உங்களுக்கு ஆயிரக்கணக்கான இதயங்கள் இணைந்து பாராட்டுகின்ற, லட்சக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்கள் பாராட்டக்கூடிய ஓர் அற்புதமான சூழ்நிலை வந்திருக்கிறது. எனவேதான், அவர் செய்ததைதான், திறந்திருக்கிறார்கள். எதைச் செய்தாலும், அவர் போட்ட பாதையைத்தான் திறப்பார்கள். அவர் போட்ட திட்டமான பேருந்து நிலையத்தைத்தான் திறப்பார்கள். ஏனென்றால், அவர் எந்தச் சாதனையையும் விட்டு வைத்ததில்லை. ஆகவேதான், இவை அத்தனையும் பெருமிதத்தோடு இருக்கக்கூடிய உங்கள் வாழ்க்கையிலே சிறப்பாக இருக்கும்.

நண்பர்களே! மிக முக்கியமான அந்த நூலகத்திலே ஒரு சிறப்பான இடத்திற்கு அழைத்துப் போனார். அங்கே செல்வதற்கு நாங்கள் மின்தூக்கியில் போய்விட்டோம். திரும்பி வரும்போது படிக்கட்டில்தான் இறங்கி வந்தோம். அப்படி வரும் போது, அங்கே இருந்த பிள்ளைகள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருந்தார்கள்; மாணவ செல்வங்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அந்த அமைப்பு முறை இருக்கிறதே, "படி, படி, படி, படி, படி" என்று எத்தனை படிகள். நூலகத்துக்குள்ளே வருவதற்கு முன்பே "படி, படி, படி," மொத்தம் 53 படி.நான் எண்ணிப் பார்த்தேன். எனவேதான், இவை அத்தனையும் அவருக்கு அத்துப்படி.

இவ்வளவு சிறப்பான ஒரு வாய்ப்பை நீங்கள் அளித்திருக்கிறீர்கள். எனவே, இந்தச் சூரியன் ஒரு போதும் மறையாது.

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும், ஆதவன் மறைவதில்லை!

ஆயிரம் பொய்கள் உரைத்து வந்தாலும், திராவிடம் அழிவதில்லை!

இதை நன்றாக நினைத்துப் பாருங்கள். எனவே, எங்கள் திராவிடத் தளபதியே! நீங்கள் ஆட்சியில் இருந்ததை விட, மீட்சிக்குச் செய்ய வேண்டிய பணிகள் அதிகம். எனவே, உங்கள் காலம் பொன்னானது; நிறுத்திக் கொள்கிறேன் - வாழ்த்துகிறேன்! மகிழ்ச்சி அடைகிறேன்! இந்தப் பிடித்த கரங்கள், என்றைக்கும் விழாத கரங்களாக இருக்கும்.

உங்களைத் தூக்கிச் சுமப்பதில் நாங்கள் பெருமை அடைகிறோம்; உங்களைத் தூக்கிச் சுமப்பதில் பெருமை அடைகிறோம். காரணம், நாங்கள் அமர்ந்திருப்பது சாதாரணமான தோள்கள் அல்ல; அண்ணா அமர்ந்திருப்பது, பெரியாரின் தோள்கள்; கலைஞர் அமர்ந்திருப்பது பெரியாரின் தோள்கள். நாங்கள் அமர்ந்திருப்பது பெரியாரின் தோள்கள். எங்கள் தோள்கள் மீது நீங்கள் இருக்கிறீர்கள்; உங்களை தூக்கிச் சுமக்கிறோம். இந்த வரலாற்றை உருவாக்குங்கள்!

வாழ்க! வளர்க!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.



பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு: ஏன் தம்பி; த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க தி.மு.க. குதிரை பேரம் நடத்தி வருவதாக காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் பேசி இருக்காரே?

பட்டணம்: **ஆமாமய்யா; அப்படித்தான் பேசி இருக்கார். நன்றி கெட்டவங்க. இதுபோன்ற கீழ்த்தர புத்தி அவங்களுக்குத் தான் இருக்கும். அதுசரி! த.வெ.க. ஆட்சியை ஆதரிக்க அமைச்சர் பதவியை கேட்ட காங்கிரஸின் பேரத்துக்கு என்ன பெயர்: 'மங்க்கி' பேரம்னு சொல்லலாமா?**